# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/2014

2019 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09-ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய PW -3 வது நபரின் வாக்குமூலம், (1969-ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | வயது | : |
| த/பெ.(அ)க/பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | : |

**முதல் விசாரணை**

நான் வேல்முருகன் மாடர்ன் ரைஸ் மில் கிருஷ்ணாபுரத்தில் மேலாளராக 2003 லிருந்து பணிபுரிந்து வருகிறேன். ரைஸ் மில்லில் நான் உள்பட 3 பேர் ராஜன், நீல்ராஜலூ, ஆகியோர் மேலாளராக பணிபுரிந்து வருகிறோம். ராஜன் இறந்துவிட்டார். நீல்ராஜலூ உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார். ரைஸ் மில்லில் நாங்கள் நெல் வாங்கி அரிசியாக்கி விற்பனை செய்வோம். வாதி குணசேகரன் என்ற சேகரை தெரியும். வாதியிடம் நெல் பெற்றுக் கொண்டு வவுச்சர் போட்டு பணம் கொடுப்போம். வா.த.சா.ஆ 28 ல் 80 பில்கள் எங்கள் மில்லில் கொடுக்கப்பட்டதுதான். 3 மேலாளரின் கையொப்பமும் பில்களில் காணப்படுகிறது. மற்ற மேலாளரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நெல்லுக்கு விலை உரிமையாளரின் சம்மதத்துடன் நாங்கள் நிர்ணயிப்போம். பில்லுக்கான தொகையை பொதுவாக ரொக்கமாக கொடுத்துவிடுவோம். கையிருப்பு இல்லை என்றால் வங்கி கணக்கில் செலுத்தி விடுவோம். ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலங்களில் ஒரு நாளைக்கு 200 அல்லது 300 மூட்டை நெல் கொடுப்பார். மற்ற மாதங்களில் வாரத்திற்கு 200 அல்லது 300 மூட்டை கொடுப்பார். தேவைக்கு அதிகமாக நெல் இருந்தால் வாதியிடம் நெல் வேண்டாம் என்று சொல்லிவிடுவோம். இது தவிர வாதி எங்கள் உரிமையாளரிடம்

கைமாத்தாக பணம் வாங்குவார் அதை நான்தான் வாங்கி கொடுப்பேன். பின்னர் திருப்பி செலுத்திவிடுவார்.

<u>1வது பிரதிவாதி தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

எங்கள் மில்லில் ஒரு நாளைக்கு 300 மூட்டை நெல்லை அரிசியாக்குவோம். எங்கள் மில்லிற்கு 20 வியாபரிகளுக்கு மேல் நெல் தருவார்கள். மாதத்திற்கு 18,000 மூட்டை நெல் வாங்குவோம். பில்லை ஒன்றன்பின் ஒன்றாக சரியாக போடுவோம். வா.த.சா.ஆ.28 ல் விற்பவர் இடத்தில் வாதியின் கையொப்பம் இல்லை. பொதுவாக நாங்கள் வாங்குவதில்லை. 15.08.2011 அன்று பில் எண் 34, 16.09.2001 அன்று பில் எண் 47, 10.09.2011 பில் எண் 44, ஆகியவை 'பி' புக்கில் வரிசைப்படி கண்ட பில்கள் என்றால் சரிதான். 20.03.2012 அன்று பில் எண் 17, 10.04.2012 அன்று பில் எண் 22, கொடுத்தாக கண்டிருக்கிறது என்றால் சரிதான். 20.04.2012 அன்று பில் எண் 37,15.07.2012 அன்று பில் எண் 25, 20.08.2012 அன்று பில் எண் 32, 02.02.2013 அன்று பில் எண் 19, 10.03.2013 அன்று பில் எண் 23, 10.07.2013 அன்று பில் எண் 40, 10.03.2014 அன்று பில் எண் 26, 10.07.2014 அன்று பில் எண் 39, ஆகியவை கொடுத்துள்ளோம். மேற்சொன்ன பில்கள் அனைத்துமே 'பி' புக்கில் வரிசைப்படி கண்ட பில்கள் என்றால் சரிதான். 2011 ல் வழங்கப்பட்ட பில்கள் 44,47 என்று கண்டுள்ளது. அதன்பிறகு வழங்கப்பட்டதாக சொல்லப்படும் பில்கள் 19,17,27,25 என்று இறங்குமுகமாக உள்ளது என்றால் சரிதான். பில் புக்குகளில் 50 பில்கள்தான் இருக்கும். ஆனால் பில் புக்குகளுக்கு எண் வரிசை கொடுப்பதில்லை. 20.02.2010 அன்று பில் எண் 4, 4.05.2009 அன்று பில் எண் 6, 2.02.2010 அன்று பில் எண் 7, 17.02.2007 அன்று பில் எண் 14, 10.04.2010 அன்று பில் எண் 15, 10.03.2011 அன்று பில் எண் 16, 20.03.2012 அன்று பில் எண் 17, 12.08.2008 அன்று பில் எண் 18, 02.02.2013 அன்று பில் எண் 19, என வரிசையாக பில்கள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பில் புக்கள் தயார் செய்து கொடுக்கப்பட்டது என்றாலும் உண்மையிலேயே வாதியிடம் எங்களுக்கு எவ்வித வியாபார போக்குவரத்தும் இல்லை என்றால் சரியல்ல. வாதி நெல் விநியோகம் செய்வதற்கு உரிமம் வைத்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. வாதிக்கு லாபம்,

நஷ்டம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது.



வாதியின் பெயர் குணசேகர்தான் நாங்கள் சேகர் என்று பொய்யாக பில் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வங்கி கணக்கில் வாதியின் பெயர் குணசேகர்தான். அதை நன்கு தெரிந்து நாங்கள் சேகர் என்று பொய்யாக பில் தயாரித்து கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. வாதி எங்களிடம் வியாபாரம் செய்யவில்லை என்றாலும் அதனால் அவருக்கு லாபம் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. வாதி கடன் பெறுவதற்கு புரோ நோட் எழுதி கொடுப்பதில்லை. வாதி கடன் பெறுவதுமில்லை, திருப்பி கொடுப்பதுமில்லை, வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எல்லா பில்களும் வாதிக்காக தயார் செய்து கொடுக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4,5,7, பிரதிவாதிகள் 1 வது பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**<u>10,11பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை</u>**

இல்லை.